[2023 ஏப்ரல் 19

அவை வாரியத்தினுடைய கட்டுப்பாட்டில் இருக்கும். மற்றொன்று, ஏற்கெனவே அவை 30 ஆண்டு காலத்திற்கு முன்னால் விற்கப்பட்டவை. அவையும் பழுதடைந்து, தற்போது அவர்களும் கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த இரண்டையும் உடனடியாகச் சரி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையிலே சேலமும் அதிலே சேர்க்கப்பட்டிருக்கிறது. கண்டிப்பாக, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் பேசும்போது, ** என்ற வார்த்தையைச் சொன்னார்கள். அந்த வார்த்தைக்குப் பதிலாக பழுதடைந்த என்று மாற்றிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

வினா வரிசை எண் 185, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

185—

கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையம்

***15351—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, கரைப்பூண்டி பகுதியில் கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) போளூர் தொகுதி, கரைப்பூண்டி பகுதியில் கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையம் அமைப்பதற்குத் திட்டம் எதுவும் தற்போது இல்லை.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2023 ஏப்ரல் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.*

முற்பகல் 10–35

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில், திருவண்ணாமலையில் மட்டும் தற்போது கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையம் செயல்பட்டு வருகிறது. 1989 ஆம் ஆண்டு திருவண்ணாமலை மாவட்டம், வட ஆற்காடு மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்ட பின்பு தொடங்கப்பட்ட இந்தப் பயிற்சி நிலையம், வாடகைக் கட்டடத்தில்தான் பல ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. திருவண்ணாமலையில் செயல்பட்டு வரும் இந்தப் பயிற்சி நிலையத்திற்கு அனைத்து அடிப்படை வசதிகளுடன்கூடிய சொந்தக் கட்டடம் கட்ட அல்லது மாவட்டத்தின் மையப் பகுதியான போளூரில் ஒருங்கிணைந்த அனைத்து வசதிகளுடன்கூடிய புதிய கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையம் அமைக்க அரசு மறுபரிசீலனை செய்யுமானால், அதற்கான இடத்தையும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியையும் வழங்குகிறோம். மாநிலத்தில் இதுபோன்று எத்தனை மேலாண்மை கூட்டுறவு பயிற்சி நிலையங்கள் உள்ளன என்றும், அவற்றில் எத்தனை வாடகைக் கட்டடங்களில் செயல்படுகின்றன என்றும், ஆண்டுதோறும் எவ்வளவு மாணவர்கள் கூட்டுறவுப் பட்டயப் பயிற்சியில் சேர்க்கப்படுகின்றனர் என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இந்தப் பயிற்சி நிலையம் திருவண்ணாமலை மாவட்டத்தில் கடந்த 2001 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தமிழகத்தில் இதுவரை 22 பட்டயப் படிப்புகள் பயிற்றுவிக்கின்ற பயிற்சி நிலையங்கள் இருக்கின்றன. தற்போது நடைபெற்ற மானியக் கோரிக்கையில், இராமநாதபுரம் மாவட்டத்தில் புதிதாக பயிற்சி நிலையம் ஒன்று அமைக்க அறிவிப்பு செய்யப்பட்டிருக்கிறது. உறுப்பினர் கேட்டிருக்கிறார்; அதாவது நான் இடம் தருகிறேன், கட்டடம் வேண்டும் என்று*

சொல்லியிருக்கிறார்கள். ஒருவேளை அந்தப் பகுதியில்—இப்போது இருக்கக்கூடிய இடத்தில் இரண்டு அறைகள்தான் இருக்கின்றன. வாடகைக் கட்டடத்தில்தான் இருக்கிறது. எதிர்காலத்தில் புதிதாக ஒரு பயிற்சி நிலையம் தொடங்குவதைவிட, இப்போது வாடகை கட்டடத்தில் தேவையான அளவிற்கு இடம் இருந்தாலும், எதிர்காலத்தில் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு துறை பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.*

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுத் துறை அலுவலர்களின் செயல் திறனை மேம்படுத்தும்பொருட்டு, புனே, ஆனந்த், பெங்களூரு, லக்னோ, கொல்கத்தா, பரிதாபாத், புதுடெல்லி ஆகிய இடங்களில் கூட்டுறவுப் பயிற்சி நிலையங்களுக்கு அலுவலர்கள் பயிற்சிக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர். இந்தியாவில் கூட்டுறவு இயக்கத்தின் முன்னோடியாகத் தமிழ்நாடு போற்றப்படுகிறது. இந்தியாவின் முதல் கூட்டுறவுச் சங்கம் 1904 ஆம் ஆண்டு, திருவள்ளூர் மாவட்டம், திரூரில் தொடங்கப்பட்டது. இதுபோன்ற பல முதன்மைகள் மாநிலத்தில் உள்ளன என்பதை அறிந்த மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறையில் பணியாற்றும் அலுவலர்கள், பணியாளர்கள், தேர்ந்தெடுக்கப்படும் நிர்வாகக் குழு பிரதிநிதிகள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கும்பொருட்டு மற்ற மாநிலங்களில் செயல்படும் பயிற்சி நிறுவனங்களைப்போல தேசிய அளவிலான கூட்டுறவு கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தை 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சேலம் மாவட்டம், ஏழைகளின் இளவரசி என்று அழைக்கப்படுகின்ற ஏற்காடு, மஞ்சக்குட்டை பகுதியில் மாநில கூட்டுறவு வங்கி மற்றும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் நிதியிலிருந்து அமைக்க அரசாணைகள் வெளியிடப்பட்டு, நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டு, 25% பணிகள் முடிந்துள்ள நிலையில், தற்போது இந்தப் பயிற்சி நிறுவனம் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. ஏற்கெனவே கட்டடப் பணிகள் தொடங்கப்பட்ட ஏற்காட்டில் நிறுத்தப்பட்ட பணிகளை மீண்டும் தொடர இந்த அரசு ஆவன செய்யுமா எனக் கேட்டு அமர்கிறேன்.*

2023 ஏப்ரல் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் வேறு எங்கும் இல்லாத அளவிற்குத் தமிழ்நாட்டில் புதிதாகக் கொடைக்கானலில் இதுபோன்ற ஒரு பயிற்சி நிலையம் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில், சென்ற கூட்டத் தொடரில் அறிவிக்கப்பட்டு, இப்போது பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆகவே, எல்லா இடங்களிலும் பயிற்சி நிலையங்கள் அமைக்க வேண்டுமென்பது நோக்கம் அல்ல. இருக்கின்ற இடங்களில் உள்ளவர்களுக்குப் பயிற்சி அளிப்பது ஏதுவாக இருக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 186. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வி 25% வேலை முடிந்திருக்கிறது. அதனை மாற்றப் போவதாகச் சொல்கிறார்கள். அது உண்மையா, இல்லையா என்பதை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும்.*

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி, மூலக் கேள்விக்கு தொடர்பில்லாதது. தேவையிருந்தால், அக்கறையிருந்தால், அதற்குத் தனியாகக் கேள்வி எழுப்பினால், முழுமையான விவரம் அளிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 186, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பரந்தாமன், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

186—

குடியிருப்புகள்

***48998—திரு. இ. பரந்தாமன்:**

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—